**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**D021 இலக்கணம்–3 (பொருள்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திருக்குறளில் உள்ள முப்பாலில் அகப்பொருள் பற்றிய செய்தி இடம்பெறும் பால் எது?
2. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது எது?
3. நால்வேத நெறியினர் வகுத்த திருமண முறைகள் எத்தனை வகைப்படும்?
4. ஒருவழித் தணத்தல் என்பது களவில் நிகழும் பிரிவா? கற்பில் நிகழும் பிரிவா?
5. குரவர் எனப்படுவோர் யார்?
6. முக்கோல் பகவர் என்பது யாரைக் குறிக்கும்?
7. ஊடல் கொண்ட தலைவியைக் காணச் செல்லும் தலைவன், தன்னுடன் யாரை அழைத்துச் செல்வான்?
8. நாற்கவிராச நம்பி குறிப்பிடும் அகப்பாட்டு உறுப்புகள் மொத்தம் எத்தனை?

9. கரிக்குருவியின் சகுனத்தைப் பார்த்தறிந்து சொன்னவர்க்கு ஆநிரைகளை மிகுதியாக வழங்குவதைப் பற்றிப் பேசும் துறை எது?
10. 'பெருஞ்சோற்றுநிலை' என்னும் துறை இடம்பெறும் புறத்திணை எது?
11. தன் கணவனை மாய்த்த வேலினாலே, மனைவி தன்னைக் குத்திக் கொண்டு மாய்வதைப் பற்றிப் பேசும் காஞ்சித் துறை எது?
12. முற்றுழிஞை என்னும் புறத்திறை எந்தக் கடவுளோடு தொடர்புடையது?
13. இருவரும் தபுநிலை – இத்துறை இடம்பெறும் புறத்திணை எது?
14. வேலேந்திய ஆடவர்க்கு மட்டுமன்றி, வீரக்குடியில் பிறந்த மகளிர்க்கும் வீரப்பெருமிதம் உண்டு எனப்பேசும் புறத்துறை எது?
15. புறப்பொருள் வெண்பா மாலையின் இறுதியில் பேசப்படும் புறத்திணை எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. மருதத் திணைக்குரிய கருப்பொருள்கள் எவை?
2. அல்லகுறிப்படுதல் என்றால் என்ன என்பதை விளக்குக.
3. மனைமருட்சியின் விரிவுச் செய்திகள் யாவை?
4. களவிலும் கற்பிலும் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்களாக நாற்கவிராச நம்பி குறிப்பிடுவோர் யாவர்?
5. விரிச்சி – இத்துறையின் இலக்கணத்தை விளக்குக.
6. மகள் மறுத்து மொழிதல் – இத்துறையை விளக்குக.
7. நுழில், நூழிலாட்டு – இத்தும்பைத் துறைகளை விளக்குக.
8. நடுகல் என்றால் என்ன? இது பற்றிக் கூறும் பொதுவியல் திணைத் துறைகளைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாங்கி மதி உடன்பாட்டையும் அதன் வகைகளையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) வரைவு கடாதலின் வகைகளையும், அவற்றின் விரிவுச் செய்திகளையும் விளக்கி எழுதுக.

2. (அ) அறத்தொடு நிற்றல் பற்றி வரைவியலில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆநிரை மீட்டல் பற்றிக் கரந்தைத் திணையும் அதன் துறைகளும் கூறும் செய்திகளை விவரிக்க.

3. (அ) காஞ்சிப் போர் நிகழ்ச்சிகளைப் புறப்பொருள் வெண்பாமாலை வழிநின்று விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'அறிவுறுத்தலும் போற்றுதலும்' என்னும் பொருண்மையில் அமைந்த பாடாண் திணைத் துறைகள் கூறும் செய்திகளை விளக்குக.